https://www.al-feqh.com/ta



# 5 வணக்கமும் தல்பியாவும்

## வணக்கம்

**மொழிநடையில் வணக்கத்திற்கான கருத்து**

வணக்க வழிபாடுகள்

**பரிபாஷையில்**

ஹஜ் செய்பவரும் உம்ரா செய்பவரும் கூறுகின்றதும், செய்வதுமாகும்.

## வணக்கத்தின் எண்ணம்

ஒருவர் இஹ்றாம் அணிய நாடினால் குளித்து சுத்தமாகி இஹ்றாம் ஆடையை அணிந்து கொள்வார். ஆண்கள் தைக்கப்பட்ட அடைகளை அணிமாட்டார். ஹஜ், உம்ராவினை நிறைவேற்ற வேண்டும் என்ற தூய எண்ணத்தில் அவர் நுழைவார். அவர் செய்ய எண்ணிய வணக்கத்தை வாயல் மொழிவது அப்போது ஆகுமானது. ஆரம்பத்தில் உம்ராவை செய்து பின்னர் ஹஜ்ஜை நிறைவேற்ற நாடினால் “லப்பைக அல்லாஹும்ம உம்ரத முதமத்திஅன் பிஹா இலல் ஹஜ்” அல்லது “லப்பைக அல்லாஹும்ம உம்ரத” பின்னர் ஹஜ்ஜின் போது “ லப்பைக அல்லாஹும்ம ஹஜ்ஜன்” கிரான் செய்பவர் – “லப்பைக அல்லாஹும்ம ஹஜ்ஜன்”. கிரான் செய்பவர் உம்ரா ஹஜ்ஜிற்கிடையில் “லப்பைக அல்லாஹும்ம ஹஜ்ஜன் வஉம்ரதன்” என கூறுவார். அனஸ் ரழி அவர்கள் அறிவிக்கின்றார்கள் நபியவர்கள் கூறக்பின்வருமாறு கூறக்கேட்டேன். «லப்பைக உம்ரதன் வஹஜ்ஜன்» (புஹாரி முஸ்லிம்), அவர் மொழியவில்லை என்னறால் மனதால் எண்ணிக் கொள்ளலாம்..

## வணக்கத்தின் வகைகள்

### 1-தமத்து

தமத்து என்றால் ஹஜ் உடைய காலத்திலேயே மக்காவுக்குச் சென்று ஹஜ்ஜுக்கும் உம்ராவுக்கும்ஒரே வருடத்தில் வெவ்வேறாக இஹ்ராமுடைய ஆடையை அணிவதை குறிக்கும்



பொருளடக்கம்

வணக்கம்
வணக்கத்தின் வரைவிலக்கணம்
வணக்கத்திற்கான எண்ணம்
வணக்கத்திற்கான வகைகள்
மூன்று வணக்கங்களுக்குமான வித்தியாசம்
தல்பியா
தல்பியாவின் வரைவிலக்கணம்
தல்பியாவின் சட்டம்
தல்பியாவின் நேரமும் தல்பியாவின் இடங்களும்



https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta





தமத்துஃ அடிப்படையில் செய்யக்கூடியவர் முதலாவதாக மக்காவுக்குச் சென்று அவர்களுடைய உம்ராவின் வேலைகளை செய்வார். தவாபு செய்தல் மற்றும் தொங்கோட்டம் ஓடுதல் பின்பு முடியை குறைத்து அல்லது நீக்கி பின்னர் தம்முடைய இஹ்றாமை களைந்து ஆடைகளை அணிவார். பின்னர் துல்ஹஜ் மாதம் எட்டாவது நாள் அவர் அவர் ஹஜ்ஜுக்காக இஹ்றாம் உடைய ஆடையை அணிவார். அவர் தமத்து செய்த காரணத்தில் ஹதி கொடுப்பது கட்டாயமாகும்.

## 2-கிரான்

ஹஜ்ஜுக்கும் உம்ராவுக்கும் ஒரே தடவையில் இஹ்றாமுடைய ஆடையை அணிதல். அல்லது உம்ராவுக்காக இஹ்றாம் உடையை ஆடையை அணிந்து விட்டு தவாஃப் செய்ய முன்பதாக ஹஜ் உடைய அமல்களை செய்தல் . கிரான் என்றால் ஹஜ் உடைய செயற்பாடுகள் முடிகின்ற வரைக்கும் இஹ்றாம் உடைய ஆடையுடைய தொடர்ந்து இருப்பார். கிரானுக்காக வேண்டி ஹதி கொடுப்பது அவசியமாகும்.

## 3-அல் இப்ராத்

-வணக்கங்களில் சிறப்பானது தமத்து ஆகும். அதனை நபி ஸல் அவர்கள் தனது தோழர்களுக்கு (முஸ்லிமில் வரும்ஆயிஷா ரழி அறிவிக்கும் செய்தி) ஏவினார்கள். அதன்பின்னர் கிரான் அதன் பின்னர் இஃப்ராத் ஆகும்.

## மூன்று வழக்கங்களுக்கும் இடையிலான வித்தியாசம்

| | தமத்து | கிரான் | இப்ராத் |
|---|---|---|---|
| அமைப்பு | உம்ரா செய்தல் பின்னர் ஹஜ் செய்தல் | உம்ராவும் ஹஜ்ஜும் | ஹஜ் மாத்திரம் செய்வது |
| இஹ்றாம் | இரண்டு தடவைகள் இஹ்றாமுடைய ஆடையை அணிந்து பின்னர் களைந்து பின்னர் ஹஜ்ஜுக்காக அணிவது | உம்ராவுக்கும் ஹஜ்ஜிற்கும் ஒரே தடவையில் இஹ்ராமுடைய ஆடையை அணிதல் | ஹஜ்ஜுக்காக மாத்திரம் இஹ்ராமுடைய ஆடையை அணிவார் |
| தல்பியா | முதலாவது இஹ்றாம் அணிந்த போது "லப்பைக உம்ரத". ஹஜ்ஜிற்காக இஹ்றாம் அணிந்த பின்னர் "லப்பைக ஹாஜ்ஜன்" அல்லது "லைப்பைக உம்ரத முதமத்திஅன் பிஹா இல் ஹஜ்" | இஹ்றாம் அணியும் போது "லப்பைக உம்ரத வ ஹாஜன்" | லப்பைக ஹாஜன் என்று சொல்லுவார் |
| ஹதி | ஹதி அவசியமாகும் | அதிலே ஹதி அவசியமாகும். | ஹதி கொடுப்பது அவசியமில்லை. |
| தவாஃப் | அதிலே இரண்டு தவாஃபும் தொங்கோட்டம் முதலாவது உம்ராவுக்கும் இரண்டாவது ஹஜ்ஜுக்கும் | அதிலே ஒரு தவாஃபு அவசியமாகும் அது ஹஜ்ஜுக்குரிய தவாஃப் ஆகும் | அதிலே கட்டாயம் ஒரு தவாஃப் செய்ய வேண்டும் அது ஹஜ்ஜுக்குரிய தவாஃப் ஆகும் |
| தொங்கோட்டம் | அதிலே இரண்டு தொங்கோட்டம் முதலாவது உம்ராவுக்கும் இரண்டாவது ஹஜ்ஜுக்கும் | அதிலே ஒரு தொங்கு தோட்டம் அவசியமாகும் அது ஹஜ்ஜுக்குரிய தொங்கு தோட்டம் ஆகும் | அதிலே யே கட்டாயம் ஒரு தொங்கோட்டம் ஓட வேண்டும் அது ஹஜ்ஜுக்குரிய தொங்கோட்டம் ஆகும் |

## தல்பியா செல்லுதல்

### தல்பியா செல்லுதல்

இஹ்ராமுடைய ஆடையை அணிந்தவரின் வார்த்தை "லப்பாக் அல்ஸாகும்மா லப்பைக் லா சரீக்க லக லப்பைக் இன்னல் ஹம்த வன்நிவுமத லக வல் முல்க லா சரீக்க லக"

உமர் அவர்களின் வார்த்தை நபியவர்கள் இவ்வாறு தான் சொன்னார்கள் (புஹாரி முஸ்லிம்) «லப்பாக் அல்ஸாகும்மா லப்பைக்» என்பது உனது அழைப்பிற்கு விடையளித்து விட்டேன் என்று பொருளாகும்.

உமர் அவர்களின் வார்த்தை நபியவர்கள் இவ்வாறு தான் சொன்னார்கள் 65

லப்பாக் அல்ஸாகும்மா லப்பைக் என்பது உனது அழைப்பிற்கு விடையளித்து விட்டேன் என்று பொருளாகும்.

இன்னும் அவனுக்கு நன்றி செலுத்துவதோடு, அவனது ஏவல்களுக்கு கட்டுப்படுவதையும் தவ்ஹீதை வெளிப்படுத்துவதையும் இணைவைப்பதிலிருந்து நீங்குவதையும் பொதிந்துள்ளது.

தல்பியா நபிவழியாகும். தல்பியாவின் போதும் ஆண் அவருடைய சத்தத்தை உயர்த்துவான். குழப்பத்தை பயத்தை பெண் அவளுடைய சத்தத்தை தாழ்த்துவாள்.

## தல்பியாவின் நேரமும் அதனுடைய இடங்களும்

இஹ்ராம் கட்டியவர் இஹ்ராம் கட்டிய தன் பின்னால் தல்பியாவை ஆரம்பிப்பார் அதனை அவர் அதிகமாக சொல்லுவார். பின்வரும் இடங்களில் அதிகமாக மேற்கொள்வார். அவை -

உயரத்தில் ஏறும் போது ஓடையில் அமைதியாக இருக்கும் போது, கடமையான தொழுக்களை தொழும் போது, இரவையும் பகலையும் அடைகின்ற போது

உம்ராவில் கஃபாவை சந்திக்கும் போதும் ஹஜருல் அஸ்வதை சந்திக்கும் போதும் த்ல்பியா சொல்வதை விட்டுவிடுவார். மேலும் ஹஜ்ஜில் முதலாவது ஜம்ராவிலும் பெருநாள் தினத்தில், கல் எரியும் போதும் விட்டு விடுவார்



https://www.al-feqh.com/ta

https://www.al-feqh.com/ta



